
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 11, 2021

புதன்கிழமை ஓகஸ்ட் 11, 2021 | ஒளி: 07 கதிர்: 71 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free




# வவுனியாவை வளைத்தது கொரோனா

## ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும் அபாயம்

■ க. அகரன்

தொற்றாளர்கள் அதிகரிக்கும் மாவட்டமாக வவுனியா மாவட்டம் மாறி வருவதாகத் தெரிவித்த வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், இந்நிலையில் மக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் கோரினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வவுனியா மாவட்டத்தில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துச் செல்வதாகவும் இது மாவட்டத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறி வருவதாகவும் கூறினார்.

வவுனியா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தரும் நோயாளர்களில் கணிசமானவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலையில் புதிய கொரோனா தொற்றாளர்களுக்கான விடுதி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இறக்குமதி செய்யும் பால்மா விவகாரம்:

# சகல வரிகளும் நீக்கம்

## நிதியமைச்சருக்கு அதிகாரம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்



பால்மா தட்டுப்பாடு குறித்து அமைச்சரவை கவனம் செலுத்தியதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, இந்த விடயம் குறித்து ஆராய்ந்து, தேசிய சந்தையில் பால்மாவின் விலையை அதிகரிக்காமல், பால்மா இறக்குமதிக்காக தற்போது உள்ள இறக்குமதி வரியில் திருத்தம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்கு

# ஊரடங்கு இறுதி அஸ்திரம்

■ மகேஸ்வரி விஜயனந்தன்



கொரோனா தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்தும் இறுதி முயற்சியாகவே ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்படும் என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, இதனைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழி, தடுப்பூசியாகும். அதனையே உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன என்றார்.

முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் உள்ளிட்ட சுகாதார வழிமுறைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் என தெரிவித்த அவர், பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறினால் மாத்திரமே நாட்டில் ஊரடங்கு உத்தரவை அமல்படுத்துவது குறித்து ஆராயப்படும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (10) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "நாட்டை முடக்குவது தொடர்பாக சுகாதாரத் தரப்பினர் முன்வைக்கும் காரணங்களை அரசாங்கம் ஒருபோதும் நிராகரிக்கவில்லை. தேவைப்படும் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார்.

தொடர்ச்சி P2

# நள்ளிரவு முதல் அமலானவை

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர் அமல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் அவ்வப்போது தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. இந்நிலையில், அந்தத் தளர்வுகளை மீண்டும் இறுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 500 நபர்கள் அமர்ந்திருக்கக்கூடிய மண்டபத்தில் நடைபெறும் திருமண அல்லது ஏனைய வைபவங்களின் போது 150 பேரை அனுமதிப்பதற்கும் அதற்குக் குறைந்த கொள்ளளவைக் கொண்ட மண்டபங்களில் 100 பேரை அனுமதிப்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த எண்ணிக்கை தற்போது சடுதியாகக் குறைக்கப்பட்டு,

தொடர்ச்சி P2



# உரிமை கோரப்படாமல் இருக்கும் சடலங்களை அடக்கம் செய்யவும்

அரசாங்க வைத்தியசாலைகளில் உரிமை கோரப்படாமல் இருக்கும் அல்லது அனாதரவான சடலங்களை, அரச செலவில் அடக்கம் செய்வதற்கு இன்றேல் தகனம் செய்வதற்கு நீதிமன்றத்தால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் சவச்சாலைகளில் மேலதிகமாக இருக்கும் சடலங்களை அகற்றும் நடவடிக்கையாகவே இது முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சவச்சாலையில், உரிமைகோரப்படாத 40 சடலங்கள், கிழக்கு மாகாணத்தில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதற்கும் நீதிமன்றம் அனுமதியளித்தது.

தொடர்ச்சி P2



# தாயின் கழுத்தை கத்தியால் அறுத்த தனயன் கைது

■ கனகராசா சரவணன், வரீண்டராஜா சஜேஷ், வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலிலுள்ள குமாரவேலிய கிராமத்தில் தனது தாயாரின் கழுத்தை கத்தியால் அறுத்துக் கொலை செய்த 45 வயதான மகனைக் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (10) பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில், குமாரவேலிய கிராமத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பொன்னுத்துரை தவமணி என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த தாயார் அவரது மகளுடன் வாழ்ந்துவரும் நிலையில்,

தொடர்ச்சி P2

# கழற்றியெறிந்த கவசங்களால் கால்நடைகளுக்கும் ஆபத்து

## கொரோனா பரவுமென உரிமையாளர்கள் அச்சம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்



கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வரும் நிலையில், சிலர் தொற்றுகளை பரவச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதிக்குச் செல்லும் மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியோரத்தில்,

தொடர்ச்சி P2

# ரிஷாட்டுக்கு விளக்கமறியல் நீடிப்பு



முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனை, எதிர்வரும் 18ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு, கோட்டை நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர்,

தொடர்ச்சி P2




பரீட்சைகள் ஆணையாளரின்

# விசேட அறிவிப்பு

நாட்டில் நிலவும் கொரோனா ஆபத்துக் காரணமாக, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று, பரீட்சைகள் ஆணையாளர் பீ.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

அதன்படி, பெறுபேற்றுச் சான்றிதழ்கள் ஒன்லைன், மின்னஞ்சல் மூலம் மட்டுமே வழங்கப்படும். விண்ணப்பதாரருக்கு சான்றிதழ்கள் தேவைப்படின், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் அல்லது விரைவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் 0112784537 அல்லது 0112784208 ஆகிய தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் அல்லது அதிகாரப்பூர்வ இணையதளமான www.doenets.lk இலிருந்து மேலதிகத் தகவல்களைப் பெறலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 'இரண்டாவது விவாகரத்து இனித் தேவையில்லை'




வெளிநாடுகளில் இலங்கையர்கள் பெறும் விவாகரத்து, மண நீக்கம் அல்லது சட்ட ரீதியான திருமண முறிவுகளை, இலங்கையில் ஏற்றுக்கொள்ளும் வகையிலான சட்ட ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இலங்கையில் திருமணம் செய்த பின்னர் வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கையர்கள் குறித்த நாடுகளில் திருமண வழக்குகளைப் பதிவு செய்து,

தொடர்ச்சி P2

# கடலட்டைப் பண்ணைக்கு டக்ளஸ் முற்றுப்புள்ளி



பூநகரி - கௌதாரிமுனை கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிகளை வழங்கி வைத்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பிரதேசத்தில் இலங்கை - சீனக் கூட்டு நிறுவனத்தால் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு பராமரிப்பு நிலையத்தை சட்ட ரீதியாக கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தின் பொறுப்பில் ஒப்படைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் கடந்த சில வாரங்களாக பரபரப்பாக

தொடர்ச்சி P2

'World Book of Records' விருதுக்கு

# செந்திலின் பெயர் பரிந்துரை



'World Book of Records' என்பது உலகத்தரம் வாய்ந்த சர்வதேச சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாகும். அதன் முதன்மை குறிக்கோள் உலகளவில் அறிவியல், விளையாட்டு, கலை, தொழில்நுட்பம், சுகாதாரம், சுற்றுச்சூழல் , சமூக மாற்றம் ஆகிய துறைகளில் சிறந்த சாதனையாளர்களை அடையாளப்படுத்தி, அவர்களின் பணிகளை உலகறியச் செய்வதாகும்.

இந்நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமானின் பெயர் இவ்விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், அரசின் நடவடிக்கைகளை

தொடர்ச்சி P2

LK Newspapers

PAGE 1 தொடர்ச்சிகள்

# சகல வரிகளும் நீக்கம்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தற்போதுள்ள பால்மா இறக்குமதிக்கான வரி வீதத்தைத் திருத்தம் செய்வதன் மூலமோ அல்லது வேறு பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமோ போதியளவு பால்மாவை உள்ளூர் சந்தையில் விநியோகிப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதியமைச்சருக்கு அதிகாரம் வழங்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றார்.

சந்தையில் பால்மாவுக்கு சிறியளவு தட்டுப்பாடு உள்ளது. இதற்கான பிரதான காரணமாக விலை அதிகரிப்புத் தொடர்பான பிரச்சினை ஒன்று எழுந்துள்ளதென்றும் இதனால் அமைச்சரவையில் தெளிவான முடிவு ஒன்று எடுக்கப்பட்டது என்றார்.

இதேவேளை, சந்தையில் சீனிக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஸ் பத்திரண, இலங்கையின் தேவைக்கு அதிகமாகவே நாட்டில் பெருந்தொகை சீனி உள்ளதென தெரிவித்த அவர், தற்போது நாட்டில் 3 மாதங்களுக்கு போதுமான இருப்பு உள்ளது. ஏனெனில், சீனியின் இறக்குமதி வரி குறைக்கப்பட்டதன் பின்னர், பாரிய தொகை சீனி இறக்குமதி செய்யப்பட்டது. அதனால் சீனி தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றார்.

இது தொடர்பில் நாம் நுகர்வோர் அதிகாரசபைக்கும் அறிவுறுத்தியுள்ளோம் என தெரிவித்த அமைச்சர் ரமேஸ் பத்திரண, சமையல் எரிவாய குறித்து மக்களிடம் வீண் அச்சம் ஏற்பட்டுள்ளது. இது நிறுவனமொன்றின் வியாபார தந்திரம். ஆனால், நாட்டில் போதுமான இருப்பு உள்ளது என்றார்.

# ஊரடங்கு இறுதி அஸ்திரம்

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்துவது அரசாங்கத்தின் தேவைக்காக அல்ல என்றும் மக்களின் செயற்பாடுகளே இவற்றைத் தீர்மானிப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதார தரப்பினரின் எச்சரிக்கையை அரசாங்கம் ஏன் கவனத்தில் எடுக்கவில்லை என, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ரமேஸ் பத்திரன,

"நாட்டை முடக்கிய பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பயணக் கட்டுபாடுகள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைய திருத்தப்பட்ட பல சுற்றுநிருபங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வாறு சுற்றுநிருபங்கள் வெளியிடுவதற்கான நோக்கமும் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கே ஆகும்" என்றார்.

# வவுனியாவை வளைத்தது கொரோனா

இதேவேளை, வைத்தியசாலையில், ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவித்த அவர், இவ்வாறான நிலைமைகள் கொரோனா தொற்றாளர்கள் தவிர்ந்த ஏனைய நோயாளர்களின் சுகாதார தேவையை நிவர்த்திப்பதில் கடும் சிக்கல் நிலையைத் தோற்றுவிக்கும் வாய்ப்புள்ளது என்றும் கூறினார்.

இதேவேளை, "சுகாதாரப் பணியாளர்களும் கொரோனா தொற்றுக்கு ஆட்பட வேண்டியுள்ளமையால் சுகாதாரத் துறைக்கும் பாதிப்பு ஏற்படும் சாத்தியங்கள் உருவாகும் என்பதால், மக்கள் கொரோனா தொற்றில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள முன்வர வேண்டும்" எனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

# உரிமை கோரப்படாமல் இருக்கும் சடலங்களை அடக்கம் செய்யவும்

அதுமட்டுமன்றி, களுபோவில, ராகம வைத்தியசாலைகளில் உரிமை கோரப்படாத சடலங்கள் தொடர்பாக இதேபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பிரேத அறைகளில் சேமிக்க முடியாத சடலங்களை, சேமிப்பதற்காக சில வைத்தியசாலைகளுக்கு வெளியே சிறப்பு உறைவிப்பான் கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால், பெரும்பாலான வைத்தியசாலைகளின் சவச்சாலைகளில், பாரிய நெருக்கடி நிலைமைத் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவு முதல் அமலானவை

திருமண வைபவமொன்றில் பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கை 50ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறை, நேற்று (10) நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என்று கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான செயலணியின் பிரதானி, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, அத்தியாவசியக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே மாகாணங்களுக்கு இடையே பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் அறிவித்தார்.

# கழற்றியெறிந்த கவசங்களால் கால்நடைகளுக்கும் ஆபத்து

பயன்படுத்திய கொரோனா பாதுகாப்பு ஆடைகளும், முகக்கவசங்களும் முறையற்ற விதத்தில் இவ்வாறு வீசப்பட்டுள்ளன.

இதனால் அவ்வீதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், குறித்த பகுதியில் கூடுதலான கால்நடைகள் மேய்ந்து திரிவதால் ஒருவேளை முகக்கவசங்களிலுள்ள கிருமித் தொற்றுக்கள் கால்நடைகளையும் கொரோனா பாதித்து விடுமோ என்று, கால்நடைகள் உரிமையாளர்கள் அச்சம் கொள்கின்றனர்.

இவ்வாறு குறித்த இடத்தில் மொத்தமாக முகக் கவசங்களை வீசிச் சென்றுள்ளமை சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ரிஷாட்டுக்கு விளக்கமறியல் நீடிப்பு

தடுப்புக்காவல் உத்தரவின் கீழ், தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (10) அவர் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில், விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனை, ஏப்ரல் மாதம் 24ஆம் திகதியன்று கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாயின் கழுத்தை கத்தியால் அறுத்த தனயன் கைது

சம்பவதினமான நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் தாயாரின் வீட்டுக்குச் சென்ற மகன், தாயாரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை கேட்டு சண்டை பிடித்துள்ளார்.

தாயார் சங்கிலியை கொடுக்க மறுத்ததையடுத்து, மகனுக்கும் தாயாருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து அங்கிருந்த கத்தியால் தாயாரின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மகனைக் கைது செய்ததுடன், சம்பவ இடத்துக்கு நீதவான் சென்று சடலத்தைப் பார்வையிட்டதன் பின்னர் வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஏறாவூர் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# இரண்டாவது விவாகரத்து இனித் தேவையில்லை

பெற்றுக்கொள்ளும் தீர்ப்புக்களை, இலங்கையில் அங்கிகரிக்காமையால், வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கையர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையில் அவ்வாறான வழக்குத் தீர்ப்புக்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின், அவர்கள் மீண்டும் இங்கும் விவாகரத்து வழக்குத் தொடர வேண்டியுள்ளது.

இந்நிலையில், வெளிநாடுகள் இடம்பெறும் விவாகரத்துக்கள், மண நீக்கங்கள் மற்றும் சட்ட ரீதியான திருமண முறிவுகளை அங்கிரிக்கக்கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகளை வகுத்தல் பொருத்தமானதென நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குடும்பச் சட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய, வெளிநாடுகளில் இடம்பெறும் விவாகரத்துகள், மண நீக்கம் மற்றும் சட்ட ரீதியான திருமண முறிவுகளை இலங்கையில் அங்கிகரிப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை விதிப்பதற்கு இயலுமான வகையில் சட்ட மூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# செந்திலின் பெயர் பரிந்துரை

உடனுக்குடன் மக்களிடம் எடுத்துச் செல்லுதல், தனி நபர் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு, முககவசம், தடுப்பூசி, சமூக இடைவெளி குறித்து மக்களிடம் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தியது என மக்கள் நலனை முன்னிறுத்திப் பணியாற்றியமைக்காகவே அவரின் பெயர், இவ்விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடலட்டைப் பண்ணைக்கு டக்ளஸ் முற்றுப்புள்ளி

பேசப்பட்ட கௌதாரிமுனை கடலட்டை பண்ணை விவகாரத்துக்கு கடற்றொழில் அமைச்சரால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

பூநகரி நக்டா நிறுவன வளாகத்தில், நேற்று (10) நடைபெற்ற குறித்த ஒன்றுகூடலில் ஏழு பேருக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கிவைத்து, அதன் பின்னர் பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்காக விண்ணப்பித்துள்ள அப்பிரதேச கடற்றொழிலாளர்கள் மற்றும் தனியார் முதலீட்டாளர்கள் ஆகியோர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கௌதாரிமுனைப் பிரதேசத்தில் கடலட்டை பண்ணை அமைப்பதற்கான குறித்த பிரதேசத்தைச் சேர்ந்து சுமார் 52 கடற்றொழிலாளர்கள் இதுவரை விண்ணப்பித்திருந்தனர்.

அதனடிப்படையில், பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்தி வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக, பண்ணை அமைப்பதற்கான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.


இந்நிலையில், பண்ணைகளை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடுகளை வழங்குவதற்கு தனியார் முதலீட்டாளர் ஒருவரும் கடற்றொழில் அமைச்சரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், உடனடியாக அதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு பயனாளர்கள் மற்றும் அதிகாரிகளை கடற்றொழில் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இலங்கை - சீன கூட்டு நிறுவனத்தால் கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்த கடலட்டைக் குஞ்சு பராமரிப்பு நிலையத்தின் முதலீடும் தொழில்நுட்பமும் தமக்கு அவசியமாக இருப்பதால், குறித்த கடலட்டை குஞ்சு பராமரிப்பு நிலையத்தை, கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்திடம் ஒப்படைப்பதற்குத் தீர்மானக்கப்பட்டள்ளதாகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுத்துள்ளார்.

கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்த கடலட்டைப் பராமரிப்பு நிலையம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனினால் மக்களை குழப்பும் வகையிலான கருத்துகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்தது.

இதனால் மக்களின் உண்மையான விருப்பங்களை அறிந்து கொள்வதற்காக நேற்றைய சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 'மணி'க்கு எதிராக இருவர் உண்ணாவிரதம்



■ எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனுக்கு எதிராக, மாநகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் இருவர், நேற்று (10) உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

உறுப்பினர்களான ரஜீவ்காந், கிருபாகரன் ஆகியோரே, யாழ்ப்பாணம் மாநகர சபை நுழைவாயிலுக்கு முன்பாக நேற்றுக் காலை முதல், இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சபை உறுப்பினரான ரஜீவ்காந்தின் வட்டார அபிவிருத்தி நிதியை, அரசியல் பழிவாங்கல் காரணமாக நிறுத்தி வைத்திருக்கும் மேயரின் அராஜக செயற்பாட்டைக் கண்டித்தே, இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். மேயரின் திட்டமிட்ட வகையில், அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுவது தொடர்பில் தாம் உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட பல தரப்பினரிடமும் முறையிட்டுள்ளதாகத் தெரிவித்த அவ்விருவரும், இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

தமக்கான உரிய தீர்வு விரைந்து கிடைக்காத விடத்து, தொடர்ப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும், அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# சில்லறை விலையை மீறினால் அபராத தொகையும் கூடும்

அதிகபட்ச சில்லறை விலையை மீறி அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் 2,500 ரூபாய் அபராதத்தை 100,000 ரூபாயாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இதேவேளை, தனியார் எரிவாயு நிறுவனங்கள் தங்கள் விநியோக நடவடிக்கையை நிறுத்தியமை தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற முடிவு தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

# "நாங்கள் விளிம்பில் இருக்கிறோம்"

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

நாடு முழுவதும் கிட்டத்தட்ட அனைத்து சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளிலும் இலங்கை அதிகபட்சமான சுகாதாரப் பாதுகாப்புத் திறனை எட்டியுள்ளதாக 'கொவிட்-19: நாங்கள் விளிம்பில் இருக்கிறோம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச பிணக்கிடங்குகள் ஏற்கெனவே அவற்றின் சேமிப்புத் திறனை மீறிவிட்டன. ஒருவருக்கு நிதி வசதிகள் இருந்தாலும் நிலைமை சமமான அளவில் மோசமாக உள்ளது. ஏனெனில், தனியார் துறையும் அதன் வரம்பை அண்மித்துள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நாளாந்த மரண எண்ணிக்கை அதிகரித்து வருவதாக எச்சரித்துள்ள மருத்துவ நிபுணர்கள் சங்கம், இலங்கை தற்போது உலகின் மிக உயர்ந்த கொரோனா இறப்பு விகிதங்களைப் பதிவு செய்வதாக சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், கால அவகாசம் இல்லாததால், மிகவும் கடுமையான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விரைவில் விதிக்கப்பட வேண்டும் என்று மருத்துவ நிபுணர்களின் சங்கம் கருதுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஆபத்தான நோயாளிகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து கொரோனா கட்டுப்பாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்ய மருத்துவ நிபுணர்களின் சங்கம், அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

உலகின் சிறந்த தடுப்பூசி செயற்திட்டம் தற்போது எங்களிடம் இருந்தாலும் தற்போதைய தடுப்பூசி செயற்பாடு, நாட்டில் பேரழிவை ஏற்படுத்தி வரும் தொற்றுநோயின் தற்போதைய அலை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LK Newspapers Viber Community

# ‘14 நாள்களுக்கு நாட்டை முழுமையாக முடக்குங்கள்’



14 நாள்களுக்கு நாட்டை முழுமையாக முடக்க வேண்டுமெனத் தெரிவிக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் விரைவாக தீர்மானமொன்றுக்கு வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதால், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வைத்தியசாலைகள், கொரோனா சிகிச்சை நிலையங்களில் தொற்றாளர்கள் நிரம்பி வழிவதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். இதற்காக சமூகப்பொறுப்போடு மக்கள் நடந்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மக்கள் பயணங்களைக் குறைத்து பொறுப்போடு நடந்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் நாளாந்தம் தொற்றுக்குள்ளாகி இறப்போரின் எண்ணிக்கை 150ஐ தாண்டும். அதேபோல தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் அதிகமானோர் உயிரிழப்பதற்கு டெல்டா வைரஸே காரணமெனவும், நாட்டை முழுமையாக 14 நாட்களுக்கு முடக்கினால் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த விரைவாக தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டும். கொரோனா வைரஸால் இறப்பதா அல்லது பட்டினியால் உயிரிழப்பதா என்கிற இரு சவால்களே நம் முன்னே இருப்பதாகவும் தெரிவித்தார்.

சுகாதாரத்துறையின் ஆலோசனையை

# அரசாங்கம் புறக்கணித்து

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் தரப்பினர் கூறும் ஆலோசனைகளை அரசாங்கம் புறக்கணித்து வருவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், தொற்றால் உயிரிழப்போர் தொடர்பில் அரசாங்கம் வழங்கும் தகவல்கள் சந்தேகம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அலட்சியப் போக்கால் நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. அரசியல் தேவைகளுக்காக நாட்டில் அமலில் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையும் இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.



30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்துப்படுவது வரவேற்கத்தக்கது எனத் தெரிவிக்கும் அவர், எனினும் பாடசாலைகள் திறப்பதற்கு முன்னர் 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கூறும் அனைத்தையும் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் என கருத முடியாது. ஒரு வார காலத்துக்கு நாட்டை முடக்க வேண்டுமென சுகாதாரத் தரப்பினர் கூறி வருகின்றனர். எனினும் அரசாங்கம் இந்த விடயத்தில் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## திறந்து வைப்பு



வெளிநாட்டு அமைச்சின் கீழ் கொன்சியூலர் சேவைகளை விரிவுபடுத்தும் முகமாக மதகுருமார்கள், ஏற்றுமதியாளர்களுக்கான இரண்டு தனிப் பிரிவுகள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அறிவுறுத்தலின் பேரில் நேற்று(10) திறந்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில், வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவும் கலந்து கொண்டார்.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (09) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை சந்திப்பின் போது, எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில

## இருதரப்பு ஒப்பந்தம்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் கோவன் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பும் கைச்சாத்திடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் எசெக்ஸ் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த ராஜபக்ஷ ஒப்பந்தத்தில் இருதரப்பும் கைச்சாத்திடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## மூலதனத்துக்கு சந்தர்ப்பம்

‘கொரோனாவிலிருந்து மீண்டெழும் சௌபாக்கிய வசதி’ என்கிற கடன்வசதி முறையின் கீழ் அரச வர்த்தகங்களுக்கான செயற்பாட்டு மூலதனத்தைப் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக நிதி அமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## விசேட குழுவுக்கு அங்கிகாரம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் விவசாயம் தொடர்பான பேராசிரியர் பிரியந்த இந்திரலால் யாபா தலைமையில் துறைசார் நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக விவசாய அமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## விசேட பொறிமுறைக்கு அங்கிகாரம்

தனியார் துறையினரின் பங்களிப்புடன் விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை நடத்திச் செல்வதற்கான முறையான பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## புதிய சட்டம் தயாரிப்பு

பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, 1980 ஆண்டு 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் நிறுவனங்களை (பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்தக் கூடிய வகையில் சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## சட்டத்தில் திருத்தம்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தை மூன்றாம் நிலை உயர்கல்வி நிறுவனமாக உருவாக்குவதற்கும் இயலுமான வகையில் 2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சுற்றுலாத்துறை அமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## விவசாய அமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம்

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்கும் தேவையான உரத் தொகையை விநியோகிப்பதற்காக சர்வதேசப் போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகையை வழங்குவதற்காக விவசாய அமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## உப-குழு நியமனம்

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகள் பற்றி மேலெழுந்துள்ள நிலைமைகள் தொடர்பாக அமைச்சரவை விரிவாகக் கலந்துரையாடியுள்ளது. அதற்கமைய, இவ்விடயத்துக்குரிய அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினை தொடர்பாக மேலதிக விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை உப-குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

வழிகாட்டல்களை மீறிய

# 70 பஸ்களின் அனுமதிப் பத்திரம் நீக்கம்



சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை மீறி, ஆசன எண்ணிக்கையைவிட அதிகளவான பயணிகளை ஏற்றிச்சென்ற சுமார் 70 பஸ்களின் அனுமதிப் பத்திரம் நீக்கப்பட்டு, அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் 17 பஸ்களுக்கும், மாவட்டங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் 50இக்கும் மேற்பட்ட பஸ்களுக்கும் அனுமதிப்பத் பத்திரங்கள் இரத்து செய்யப்பட்டு, அந்த பஸ் ஊழியர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் பஸ் சாரதிகள், நடத்துநர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுக்கும் செயற்பாடுகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

RTI ஆணைக்குழுவின் பதவிக்காலம்?

# ஆணையர், உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்




தகவலறியும் ஆணைக்குழுவின் பதவிக்காலம் அடுத்த செப்டெம்பர் மாதம் நிறைவடைய உள்ளதாகத் தெரிவிக்கும் ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா, 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஆணையாளர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

தகவலறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர், ஏனைய உறுப்பினர்கள் நியமிக்கப்படும்போது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து பரிந்துரைகள் பெறுவது பாராளுமன்ற பேரவையின் பொறுப்பு எனவும் ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா தெரிவித்துள்ளது.

எனினும், 19ஆவது திருத்தச் சட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புப் பேரவை போலல்லாது, யாரை நியமிக்க வேண்டுமென்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு வெளிப்படையாக பாராளுமன்ற பேரவையால் பெயர்களைப் பரிந்துரைக்க முடியாது. வெறும் அவதானிப்புகளை மாத்திரமே செய்ய முடியும்.

ஆணைக்குழுவுக்கு நியமனங்களை மேற்கொள்ளும்போது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி கருத்திற்கொள்ளவாரென TISL எதிர்பார்ப்பதாகவும், ஜனநாயகத் தன்மை தொடர்ந்து நிலைநாட்டப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பணியாளர்கள் பலருக்கு தொற்று

# ‘ரயில் கொரோனா’ கொத்தணி அபாயம்

ரயில் போக்குவரத்து சேவையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத நெருக்கடி நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் ரயில் சேவையாளர்களில் பெரும்பாலானோர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள் என தெரிவித்துள்ள ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் செயலாளர் சுசுன் சாமர, இந்நிலை தொடர்ந்தால் ரயில் கொரோனா கொத்தணி உருவாகும். எனவே, ரயில் நிலையங்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த ரயில்வே திணைக்களம் உரிய நடவடிக்கைகளை இதுவரையில் முன்னெடுக்கவில்லை என்றார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ரயில் கட்டுப்பாட்டு காரியாலயம் சேவையாளர்கள், ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட சேவையாளர்களில் 12 பேர் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். களுத்துறை, இதுருவ, கொலன்னாவ ஆகிய ரயில் நிலையங்களில் சேவையாற்றுபவர்களில் பெரும்பாலானோர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இந்நிலையில், ரயில் போக்குவரத்து சேவையினை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கான பொருத்தமான திட்டத்தை இதுவரையில் அறிமுகப்படுத்தவில்லை. ஆகவே, ரயில் குறைப்பாடுகளுக்கு ரயில் திணைக்களம் உரிய தீர்வை வழங்க வேண்டும் என்றார்.

அரசியல் கைதிகள் விடுதலை:

# தென்பகுதி மக்களின் கோரிக்கையாகவும் அமைய வேண்டும்



■ க. அகரன்

அரசியல் கைதிகளுடைய விடுதலை என்பது, தமிழ் மக்களுடைய ஒரு கோரிக்கையாக மட்டுமல்ல, அது தெற்கில் இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையாகவும் அமைய வேண்டுமென, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அரசியல் கைதிகளுடைய விடயத்தில் தெற்கில் செயற்படுகின்ற நீதிமன்றங்கள் ஒரு விதமாகவும், வடக்கு, கிழக்கில் செயற்படுகின்ற நீதிமன்றங்கள் இன்னொரு விதமாகவும் செயற்படுவது குறித்து ஐ. நா போன்ற அமைப்புகளுக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம் என்றார்.

அரசியல் கைதிகளுடைய விடுதலை என்பது, தமிழ் மக்களுடைய ஒரு கோரிக்கையாக மட்டுமல்ல, அது தெற்கில் இருக்கின்ற மக்களுடைய கோரிக்கையாகவும் அமைய வேண்டும் என்றார்.

அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்கின்ற குரல் தெற்கிலும் இடம்பெற வேண்டும். அரசியல் கைதிகள் எந்த விதமான நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும், அவர் கூறினார்.

LK Newspapers vibe community

அனைத்து விதமான கற்பித்தலில் இருந்தும்

# வவுனியா ஆசிரியர் சங்கங்களும் விலகல்

■ க. அகரன்




ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டங்கள் முடிவுறுத்தப்படும் வரை அனைத்து விதமான கற்றல், கற்பித்தல் பணிகளிலிருந்தும் தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதாக, வவுனியா மாவட்ட ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

வவுனியாவில், நேற்று முன்தினம் (09) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, சங்கங்களின் பிரதிநிதிகள், இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர்கள், சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டங்கள் வலுப்பெற்றுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் வவுனியா மாவட்டத்திலும் சகல தொழிற்சங்கங்களும் இணைந்து ஒரு சம்மேளனத்தை உருவாக்கியுள்ளோம் எனவும் அதனூடாக போராட்டத்தை வலுவுடையதாக மாற்ற வேண்டிய தேவை எமக்கும் உள்ளது எனவும் தெரிவித்தனர்.

# தடுப்பூசி அட்டையை உடன் வைத்திருங்கள்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி நகர சபை, பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பொலிஸ் நிலையம் போன்ற இடங்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ளவரும் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் கொரோனாத் தடுப்பூசி செலுத்திய அட்டையை உடன் வைத்திருத்தல் அவசியமாகும் எனக் காத்தான்குடி நகருக்கான கொவிட்-19 தடுப்புச் செயலணி அறிவித்துள்ளது.




நாட்டில் வேகமாகப் பரவிவரும் 'டெல்டா' திரிபு தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற முக்கிய அவசரக் கூட்டத்திலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத அனைவரும் தங்களது பகுதி கிராம சேவகரைத் தொடர்புகொண்டு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளர்.

அத்தோடு, கடற்கரை, ஆற்றங்கரை போன்ற பொது இடங்களில் மக்கள் கூடுவது மறு அறிவித்தல் வரை தொடர்ச்சியாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் திருமண வலீமா மண்டபங்கள் வாடகைக்கு விடுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், திருமண நிகழ்வுகள் மாத்திரம் 25 பேருடன் மட்டுப்படுத்தப்படுவதோடு, கலந்துகொள்ளும் அனைவரது தகவல்களும் பதியப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உளுந்து செய்கையில்

# மஞ்சள் நோய்



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள உளுந்து செய்கையில், மஞ்சள் நோய் தாக்கம் அதிகரித்திருப்பதாக, விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளில், இவ்வாண்டு சிறுதானிய செய்கையில் உழுந்து செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கும் உளுந்து செய்கையில் கூடுதலான பிரதேசங்களில், மஞ்சள் நோய் தாக்கம் அதிகளவில் காணப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில் இந்த உளுந்து செய்கையானது வெற்றி அளித்திருக்கும் போதும், இம்முறை ஒரு பங்கஸ் நோய் தாக்கத்தால், உளுந்து செய்கையில் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும், விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கில்

# குடிநீர் நெருக்கடி ஏற்படவில்லை

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில், குடிநீர் தேவைப்படுபவர்களுக்கு, குடிநீர் விநியோகித்து வருவதாக, மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் எம். தயானந்தன் தெரிவித்தார்.

இது தொர்பில் தொடர்ந்துரைத்த அவர், தற்போது மழை பெய்திருப்பதன் காரணமாக, கிணறுகளில் நீர் காணப்படுகின்றதென்றார்.

கடந்த காலங்களில் இம்மாதங்களில் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வது வழமை எனத் தெரிவித்த அவர், மழை பெய்ததன் காரணமாக கிணறுகளில் நீர் காணப்படுவதால் இம்மாதம் குடிநீர் நெருக்கடி குறைந்து காணப்படுகின்றது என்றும் கூறினார்.



# குளவிக்கொட்டு; ஒருவர் மரணம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதில், நேற்று முன்தினம் (09) மாலை 6.30 மணியளவில் குளவிக்கொட்டுக்கு உள்ளான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

64 வயதுடைய கதிரேசு செல்வரத்தினம் என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இந்நபர், தேன் எடுத்துக் கொண்டிருக்கையில், குளவிக் கூடு கலைந்து, குளவிகள் கொட்டியுள்ளன.

பின்னர், அவர் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# ஆளுநரை சந்தித்தார் கிழக்கு கடற்படை தளபதி



■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிழக்கு கடற்படையின் புதிய தளபதி `ரியர் அட்மிரல் சஞ்சீவ டயஸ், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (09) சந்தித்தார். சஞ்சீவ டயஸ் பதவியேற்ற பிறகு ஆளுநரை சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

இதன்போது இருவருக்கும் இடையே சிறப்புக் கலந்துரையாடலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இன்னல்களை எதிர்நோக்கும் ஒட்டமாவடி மீனவர்கள்



■ எச்.எம்.எம்.பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒட்டமாவடி ஆற்றில் மீன்பிடிக்கும் மீனவர்கள் பல இன்னல்களை அனுபவித்து வருவதாக ஒட்டமாவடி மூன்றாம் வட்டார மின்னத் மீன்பிடி சங்கத் தலைவர் ஏ.ஏ.சலீம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "எமது மீனவர்கள் ஒட்டமாவடிப் பாலத்தைத் தாண்டி, தியாவட்டவான் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லும் போது, அப்பகுதியிலுள்ள ஆற்றில் சிலர் முட்கம்பிகளையிட்டுத் எமது தொழிலுக்குத் தடையை ஏற்படுத்துவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

"இதனால் பெறுமதியான வலைகள் முட்கம்பிகளில் சிக்கிச் சேதம் அடைகிறது. குறித்த பகுதிகளில் மீன் பிடியில் ஈடுபடும் போது கல் வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகிறது. தகாத வார்த்தைகளால் ஏசுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்".

வலைகள் சேதமடைந்த நிலையில் தமது தொழில்களைத் தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் இருப்பதாகவும், இந்நாசகார செயல்களை செய்யும் நபர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமெனவும் தாம் தொடர்ந்தும் இத்தொழிலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கடற்றொழில் பரிசோதகரிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



சேதனப் பசளை

# தயாரிப்பு இடங்கள் அங்குரார்ப்பணம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்டுள்ள சௌபாக்கியா திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தீகவாபி கிராமத்தில் சேதனப் பசளை தயாரிக்கும் இடங்கள், நேற்று முன்தினம் (09) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் எம்.எப். ஏ. சனீர் கலந்துகொண்டு சேதனப் பசளை தயாரிக்கும் இடங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் "நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு முன்மொழியப்பட்டுள்ள சேதனப் பசளையை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் தூர நோக்குமிக்க காத்திரமான இத்திட்டம் வரவேற்கப்பட வேண்டியது" எனத் தெரிவித்தார்.

மேலும் 'காலநிலை மாற்றத்துக்கு நிலைபேறான தீர்வுகளுடனான பசுமையான சமூக பொருளாதார கட்டமைப்பை நோக்கி' எனும் எண்ணக்கருவில் இரசாயனங்களின் பாவனைகளின்றிய கிழக்கு மாகாணத்தில் சேதன பசளை உற்பத்தியிலும், அது குறித்து பிராந்திய விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்நிகழ்வில் சேதனப் பசளைகளை எவ்வாறு தயாரிப்பது என்ற செய்முறை விளக்கமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறையில்

# உச்சத்தைத் தொட்ட கொரோனா

■ வி.ரி.சகாதேவராஜா



அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் (9) 277 கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ளது. இதுவே இம்மாவட்டத்தில் ஒரே நாளில் பதிவான அதிஉயர் எண்ணிக்கையாகும்.

அம்பாறை மாவட்டத்துக்குள் வரும் அம்பாறை பிராந்தியத்தில் 171 பேரும் கல்முனைப் பிராந்தியத்தில் 106 பேரும் தொற்றுக்கிலக்காகியுள்ளனர். கூடவே கல்முனைப் பிராந்தியத்தில் இரு மரணங்களும் சம்பவித்திருக்கின்றன.

இதுவரை காலமும் ஒரேநாளில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 100ஐத் தாண்டியது இல்லை. எனவே, தற்போது நிலைமை மோசமாகிறது என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டொக்டர் கண.சுகுணன் தெரிவித்தார். மேலும், இந்நிலைக்கு மக்களின் கவனயீனமும், அட்சியப் போக்குமே காரணம் என்றும் வருத்தம் தெரிவித்தார்.

மடுவுக்கான

# பாதயாத்திரை ஆரம்பம்




■ ஷ.கீதாஞ்சன்

கொரோனா தொற்றுக் காரணமாக மடு மாதா திருத்தலத்தின் ஆவணி திருவிழா, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பக்தர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி, மடு அன்னையின் ஆவணித் திருவிழா நடைபெறவுள்ள நிலையில், வடக்கில் உள்ள மாவட்டங்களில் இருந்து மக்கள் பாதயாத்திரையாக செல்கின்றார்கள்.

முல்லைத்தீவு, இரணைப்பாலை ஆகிய பகுதிகளில் இருந்து கட்டம் கட்டமாக மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்ய பாதயாத்திரை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆண்டு தோறும் ஆவணி 15ஆம் திகதி, மடு அன்னையின் திருவிழாவை முடித்துக்கொண்டு திரும்பும் பக்தர்கள், இம்முறை நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா காரணமாக 13ஆம் திகதிக்கு பின்னர் திருத்தலத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில், அதற்கு முன்னர் நேர்த்திக் கடன்களை நிறைவுசெய்ய கட்டம் கட்டமாக பாதயாத்திரை மேற்கொண்டுள்ளதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள், முல்லைத்தீவின் எல்லை கிராம பாதையான நெட்டாங்கண்டல், பாலம்பிட்டி சென்று, அங்கிருந்து மடுவுக்குச் செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.



# கடற்கரையில் சடலம் மீட்பு

■ எஸ். நிதர்ஷன், எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, உதயபுரம் கடற்கரைப் பகுதியில் இருந்து நேற்று (10) காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது

உதயபுரம் பகுதியைச் சேர்ந்த மனுவல் செபஸ்டியன் (வயது 65) என்பவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (09) மாலை, கடலுக்கு குளிக்கச் சென்ற இந்நபர், வீடு திரும்பாத நிலையில், நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என, யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினக்கல் அகழ்வென

# ‘சுற்றாடலை அழிக்காதே’

## அனுமதியை இரத்துச் செய்ய மவுண்ட்ஜின் மக்கள் கோரிக்கை



இரா.யோகேசன், ரஞ்சித் ராஜபக்ஷ

வட்டவளை-மவுண்ட்ஜின் தோட்டத்தை ஊடறுத்துச் செல்லும் ஆற்றில் இரத்தினக்கல் அகழ்வை சட்டரீதியாக முன்னெடுக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யக்கோரி, வட்டவளை, மவுண்ட்ஜின் தோட்ட மக்களால் நேற்று (10) கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிற்சாலையின் முன்பாக ஒன்றுகூடி மக்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.


குறித்த ஆற்றுக்கு அண்மித்துள்ள பிரதான வீதியில், சிறியளவான மண்சரிவுகள் ஏற்பட்டவண்ணமே



காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில், அங்கு இரத்தினக்கல் அகழ்வு மேற்கொள்ளும் போது, அங்கு பாரிய மண்சரிவுகள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டினர்.

எனினும், இதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை, மகாவலி அதிகார சபை, மவுண்ட்ஜின் தோட்ட அதிகாரி, மின்சார சபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்களிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதாக குறித்த அகழ்வுக்காக சட்டரீதியாக அனுமதி பெற்றுள்ள, வட்டவளை சமூர்த்தி சங்கத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் அதிகார சபையின் செயற்பாட்டு மற்றும் பிரதேச அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஐ.எச்.டி. வீரசிங்கவிடம் வினவியபோது, மவுண்ட்ஜின் தோட்டத்துக்கு நுழையும் வீதியில், அமைக்கப்பட்டுள்ள பாலத்திலிருந்து குறித்த ஆற்றின் 50 மீற்றர் தூரத்துக்கு, தமது அதிகார சபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பூரண கண்காணிப்பின் கீழ் வட்டவளை பிரதேச சமூர்த்தி சங்கமொன்றுக்கு பல நிபந்தனைகளின் கீழ், அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



## எந்நேரமும் முறிந்து விழும் அபாயத்திலுள்ள மின்கம்பம்

### மாற்றியமைக்குமாறு கோரும் மக்கள்

இரா.யோகேசன்

கினிகத்தேனை, பிளக்வாட்டர் மேல்பிரிவு தோட்டத்தில் லயக்குடியிருப்பு ஒன்றுக்கு அருகிலுள்ள மின்கம்பம் ஒன்று முறிந்து விழும் அபாயத்தில் உள்ளதாக, மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த லயக்குடியிருப்பில் சுமார் 24 வீடுகள் காணப்படுவதாகவும், இதற்கு அருகிலுள்ள மின்கம்பம் ஒன்றே எப்போதும் முறிந்து விழும் அபாயத்தில் இருப்பதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, குறித்த மின்கம்பத்தை மாற்றித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இதுவரை இதனை மாற்றி அமைக்க எவரும் முன்வரவில்லை என குற்றஞ்சுமத்துகின்றனர்.



அதிகமான தொற்றாளர்களுக்கு ஒரே நேரத்தில் சிகிச்சை

## இரத்தினபுரி வைத்தியசாலையில் புதிய பிரிவு ஆரம்பம்

அஜித்லால் சாந்தஉதய

அதிகமான கொரோனா தொற்றாளர்களை ஒரே நேரத்தில் சிகிச்சை வழங்கக் கூடிய வகையில், பாரிய அதிதீவிர சிகிச்சைப் பிரிவொன்று, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனோஜ் ரொட்ரிகோ தெரிவித்தார்.

இதற்க முன்னர் குறித்த வைத்தியசாலையில் இருந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவே, இவ்வாறு அதிதீவிர சிகிச்சைப் பிரிவாக மாற்றப்பட்டதென்றார்.

இதில் 6 அதிதீவிர சிகிச்சைக் கட்டில்கள் உள்ளடங்களாக 16 கட்டில்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இரத்தினபுரி வைத்தியசாலையில் தினமும் அனுமதிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக் காரணமாக, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் ஆலோசனையின் கீழ், இந்த சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும் இதற்காக, அரசாங்கத்தால் 25 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.



இரண்டு உயிர்களைப் பறித்த

## நீர்த்தேக்கத்துக்கு பாதுகாப்பு வேலி

சுமணசிறி குணதிலக

படல்கும்பர பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பரையின் நீர்த்தேக்கத்தைப் பார்வையிட வரும் பலர், குறித்த நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்து உயிரிழப்பதைத் தடுக்கும் முகமாக, குறித்த நீர்த்தேக்கத்துக்கு அருகில், பாதுகாப்பு வேலி மற்றும் பார்வையாளர் மேடை ஆகியவற்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

> “பரையின் நீர்த்தேக்கத்தைப் பார்வையிட வரும் பலர், குறித்த நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்து உயிரிழப்பதைத் தடுக்கும் முகமாக, குறித்த நீர்த்தேக்கத்துக்கு அருகில், பாதுகாப்பு வேலி மற்றும் பார்வையாளர் மேடை ஆகியவற்றை அமைக்க நடவழக்கை எடுக்கப்பட்டுள்ளது

இந்த விடயம் தொடர்பில், மொனராகலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்னாயக்கவின் கோரிக்கைக்கு அமைய, ஊவா மாகாண சுற்றுலா அமைச்சு, 15 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, முன்னெடுக்கப்பட்ட பணிகளை கண்காணிப்பதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்னாயக்க பரையின் நீர்த்தேக்கப் பகுதிக்குச் சென்றிருந்தார்.

அத்துடன், இந்த வேலி அமைக்கும் பணிகள் படல்கும்புர பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம், குறித்த நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் உயிரிழந்திருந்தனர்.

சமாதான நீதவான்கள்

## சேவைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும்



ஷ. செல்வராஜா

சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டவர்கள், நீதிபதி முன்னிலையில், சத்தியபிரமாணம் செய்து கொண்ட பின்னர், தத்தமது சேவைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார், “அரசியல், தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் சேவைகளைப் பெற வருவோர் விடயத்தில், கூடிய அக்கறை செலுத்தி சுயநலத்தைக் கைவிட்டு, சமூக நலனை முன்னிலைப்படுத்தி சேவையாற்ற வேண்டும்” என்றார்.

சமூக முக்கியஸ்தர்கள் பலருக்கு, சமாதான நீதவான் நியமனங்களை வழங்கும் வைபவத்தின் போதே, பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “சமாதான நீதவான் நியமனங்கள் எனும் போது, அந்நியமனங்கள் சமூகமட்டத்தில் அங்கிகாரத்தையும், கௌரவத்தையும் ஏற்படுத்தும். மதிக்கத்தக்க பதவிகளாகும். இப்பதவிகள் தத்தமது பெயர்களுக்கு பின்னால் பொறிக்கப்படும் இரு எழுத்துக்களைக் கொண்ட அங்கிகாரமுமாகும்.

“அரச மற்றும் தனியார் துறைகளில் உயர்பதவிகளை வகித்தவர்கள், தாம் அப்பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றதும், அப்பதவிகள் வகித்தவர்களை எவரும் தேடி வரமாட்டார். அத்துடன், அவர்கள் தனித்தும் போய்விடுவர். ஆனால், சமாதான நீதவான்களானவர்கள் அக்கௌரவப்பட்டம் பெற்றதிலிருந்து, வாழ்க்கையின் இறுதிவரை அவர்களுக்குரிய அங்கிகாரம் தொடர்ந்தும் இருந்து வரும்” என்றார்.

“எந்தவோர் அரசியல்வாதியும், மேற்கொள்ளாத வகையில், ஆகக் கூடிய சமாதான நீதவான்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றேன். எம்மவர்கள் பலர் தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, சமாதான நீதவான்களைத் தேடி, பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இந்நிலையைப் போக்கவே, எம்மவர்களில் திறமைமிக்க ஆயிரக்கணக்கானோருக்கு, சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுக்க தன்னால் முடிந்தது” என்றார்.



## துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு போராட்டம் தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான துண்டுப் பிரசுரங்கள், இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்களால், தலவாக்கலை நகரில் நேற்று முன்தினம் (09) விநியோகிக்கப்பட்டன. (பி. கேதீஸ்)





மத்திய மாகாணத்தில்

## 40,000 அண்மிக்கும் தொற்றாளர்கள்

மொஹமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, 39,569 ஆக பதிவாகியுள்ளதென, மத்திய மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று (10) காலை வரை கண்டி மாவட்டத்தில் 21,446 தொற்றாளர்களும் நுவரெலியா மாவட்டத்தில் 9,166 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 9,076 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், கண்டி நகர சபைக்குட்பட்ட பகுதிகளிலிருந்து 1,517 பேரும் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 1,712 பேரும் மாத்தளை மாவட்டத்தின் உக்குவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1,763 தொற்றாளர்களும் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## திப்பிலி மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

நீலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்காப்பத்தனை பிரதேசத்தில் திப்பிலி மரத்திலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (9) மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

65 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







## சோகமயிலும் ஆர்ப்பாட்டம்

டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதிகோரி, புஸல்லாவ -சோகம தோட்டத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று, நேற்று (10) முன்னெடுக்கப்பட்டது. (நீலமேகம் பிரசாந்த்)

LK Newspapers Viber Community

# இறுதி அஸ்திரம் பயங்கரமானது; ஆனால், தவிர்க்கமுடியாது

பயணக்கட்டுப்பாடுகளை விதியுங்கள்; மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை கட்டுப்படுத்துங்கள்; இல்லையேல், கொரோனா மரணங்களையும் தொற்றாளர்களின் ஏறுமுகத்தையும் கட்டுப்படுத்தவே முடியாதென சுகாதார தரப்பினரும் நிபுணர்களும் வலியுறுத்தும் போதெல்லாம், 'செவிடன் காதில் ஊதிய சங்கொலி'யைப் போன்றிருந்த அரசாங்கம், இறுதி அஸ்திரத்தைக் கையில் எடுக்கவுள்ளதாக பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மீது கரிசனையைக் கொண்டே, சாதாரண இயக்கத்துக்கு அரசாங்கம் வழிசமைத்துக் கொடுத்திருந்தது. எனினும், பல சந்தர்ப்பங்களில் அவை, தவறானவற்றுக்கே பயன்படுத்தப்பட்டு வந்தன; பயன்படுத்தவும் படுகின்றன. ஆகையால், இறுதி அஸ்திரத்தை எடுப்பதற்குச் சிந்தித்தது. அரசாங்கத்தின் தவறல்ல; சிந்திக்க தூண்டியதே தவறு.

பயணக்கட்டுப்பாடுகள், மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக, ஓரளவுக்கேனும் தலையை வெளியில் காட்டமுடிந்தது. ஆனால், ஊரடங்குச் சட்டமொன்று அமல்படுத்தப்படுமாயின் படையினரைத் தவிர, சகலரும் தலையையே காட்டமுடியாது.

ஓரளவுக்கேனும் ஜீவியம் நடத்திக் கொண்டிருந்த பலரும் மீளமுடக்கத்துக்குச் செல்லவேண்டிய இக்கட்டான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எதிராக விரலை நீட்டுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாதவர்களே பொறுப்பாளிகளாவர்.

இரண்டாவது முடக்கத்துக்குப் பின்னர், பொருளாதார நெருக்கடி தலைதூக்கி ஆடியது. நாட்டை முடக்கியே வைத்திருந்தால், தலையையே தூக்கமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுவிடுமென்பதை முன்னரே அறிந்துகொண்ட அரசாங்கம், கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்தியது.

இறுதியில், அரச ஊழியர்கள் அனைவரையும் பணிக்கும் அழைத்தது. ஆனால், டெல்டா பிறழ்வின் தாக்கமும் மரணங்களும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே சென்றமையால், மீண்டும் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன. இறுதியில், இறுதி அஸ்திரத்தை கையிலெடுக்க வேண்டிய இக்கட்டான நிலைமைக்குள் நாடு சென்றுவிட்டது.

நாட்டை இனிமேலும் முழுமையாக முடக்குவதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லையெனத் தெரிவித்துள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், இதன் தாக்கத்தை இன்னும் 14 நாள்களுக்குப் பின்னரே பார்க்கமுடியுமென்றும் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இக்காலப்பகுதியில் நினைத்துபார்க்க முடியாதளவுக்கு அதிகரிக்கும் என்றும் நாளொன்றில் இடம்பெறக்கூடிய ஆகக்குறைந்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 200ஆக இருக்குமெனவும் எதிர்வுகூறியுள்ளது.

தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்கள், ஏற்றிக்கொள்ளவேண்டும். அதுவே, இருக்கின்றதில் ஆகக்குறைந்த பாதுகாப்பு கவசமாகும்.

இன்னும் சிலர், வகைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். இந்த தடுப்பூசியால், இத்தனை சதவீதம் நோயெதிர்ப்பு சக்தியிருக்கிறது என்பது போன்ற தகவல்களால், ஒருசிலர், இன்னுமே தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாமல் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள், தங்களுக்கும் நோயைத் தொற்றிக்கொண்டு, ஏனையவர்களுக்கும் தொற்றிவிடுவர் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இறுதி அஸ்திரத்தை அரசாங்கம் எடுத்தத்தில் தப்புமில்லை; தவறுமில்லை.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# போராட்டங்களும் ஏமாற்றங்களும்



எம்.எஸ்.எம். ஐயூப்

நாட்டில் நடைபெறும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கும் போது, நாட்டை ஆள்வது ராஜபக்‌ஷர்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

ஏனெனில், முன்னைய ராஜபக்‌ஷ ஆட்சிக் காலத்தில், ஆர்ப்பாட்டங்கள் மிகக் கொடூரமாக அடக்கப்பட்ட போதிலும், இப்போது அந்தளவு கடுமையாக அடக்கப்படுவதில்லை. தெற்கே அதிபர்களும் ஆசிரியர்களும் ஆரம்பித்த போராட்டம், தற்போது வடபகுதிக்கும் பரவியுள்ளது.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதியாகவும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பாதுகாப்புச் செயலாளராகவும் இருந்த 2005 முதல் 2014 வரையிலான கால கட்டத்தில், பல ஆர்ப்பாட்டங்களின் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் இவ்வாறான கொலைகள் இடம்பெற்றுள்ளன.

2011ஆம் ஆண்டு, ஊழியர் சேமலாப நிதியத்துக்குப் பதிலாக, தனியார் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காகவென, மஹிந்த ராஜபக்‌ஷ அரசாங்கம் தனியார் ஓய்வூதியச் சட்ட மூலத்தை முன்வைத்த போது, தனியார் துறை ஊழியர்கள் அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் ஊழியர்கள், 2011ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி கட்டுநாயக்காவில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், ரொஷேன் சாணக்க என்ற இளம் ஊழியர் கொல்லப்பட்டார்.

அதேபோல், 2012ஆம் ஆண்டு அரசாங்கம் எரிபொருள் விலையை உயர்த்திய போது, அதன் காரணமாகத் தமக்கு கடற்றொழிலைச் செய்வது கஷ்டமாக இருப்பதாகக் கூறி, சிலாபத்தில் மீனவர்கள் ஆரப்பாட்டம் செய்தனர். அப்போதும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், அன்ரன் பெர்ணான்டோ வர்ணகுலசூரிய என்ற இளம் மீனவர் உயிரிழந்தார்.

கம்பஹா மாவட்டத்தில் வெலிவேரிய பகுதியில், 'டிப்ட் புரொடக்ட்ஸ்' என்ற கையுறை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால், பிரதேசத்தில் நிலத்தடி நீர் மாசுபடுவதாகக் கூறி, அப்பகுதி மக்கள், 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி ஆர்ப்பாட்டம் செய்யும் போது, இராணுவத்தினர் மூன்று பேரைச் சுட்டுக் கொன்றனர். அதே ஆட்சியாளர்களே, இன்றும் ஆட்சியில் இருந்த போதிலும், நாட்டில் ஆசிரியர்கள், விவசாயிகள், மாணவர்கள் எனப் பலர் நாளாந்தம் ஆர்ப்பாட்டம் செய்தும், இதுவரை பாதுகாப்புத் தரப்பினருக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் கட்டளை வழங்கப்படவில்லை.

தற்போதைய ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில், மிகப் பிரதானமானவை ஆசிரியர்களினதும் விவசாயிகளினதும் போராட்டமாகும். இந்தப் போராட்டங்கள், நியாயமானவை என்பதே நாட்டில் பொதுவாக நிலவும் அபிப்பிராயமாகும்.

இறக்குமதிக்கான வெளிநாட்டு செலாவணி கையிருப்பில் இல்லாததன் காரணமாக, அரசாங்கம் முன்னறிவித்தல் இன்றி, இரசாயனப் பசளை இறக்குமதியைத் தடை செய்ததன் விளைவாக, நாட்டில் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டார்கள்.

இந்தத் தடையை நியாயப்படுத்த, அரசாங்கம் எவ்வளவு முயன்றாலும் பசளையின்றிப் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை, தொலைக்காட்சி மூலம் கண்ட நகர்ப்புற மக்களும் விவசாயிகளின் போராட்டத்தின் நியாயத்தை ஏற்றுக் கொண்டனர்.

ஆசிரியர்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை அரசாங்கத்தின் தலைவர்களும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்கிறார்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ அதைப் பகிரங்கமாகவே அண்மையில் கூறினார். ஆயினும், இப்போதைக்கு அவர்களது கோரிக்கைளை நிறைவேற்றப் பணமில்லை என்றே அரசாங்கம் கூறுகிறது.

ஆசிரியர்களின் போராட்டம், சுமார் 24 வருடங்கள் பழைமையானதாகும். அரச சேவை ஊழியர்களது சம்பளம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை அடுத்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் அந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, 1995ஆம் ஆண்டு சிரேஷ்ட நிர்வாகத்துறை அதிகாரியான பி.சி. பெரேராவின் தலைமையில் ஆணைக்குழுவொன்றை நியமித்தது.

அந்த அறிக்கை, 1997ஆம் ஆண்டு அமலுக்கு வந்ததோடு, அதன் பிரகாரம் அதிபர்கள், ஆசிரியர்கள் தவிர்ந்த அரச சேவையில் ஏனைய சகல தொழிற்றுறையினருக்கும் 60 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பாக, பின்னர் ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படும் என அப்போது கூறப்பட்டது.

ஆனால், 2005ஆம் ஆண்டு சந்திரிகாவின் ஆட்சி முடிவடையும் வரையிலும் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை ஆராயப்படவோ அரச துறையில் ஏனையவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு அவர்களுக்கு வழங்கப்படவோ இல்லை. 2005ஆண்டு டிசெம்பர் மாதம் அதிகாரத்தைக் கையேற்ற மஹிந்த ராஜபக்‌ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் அந்தப் பிரச்சினையை அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களோ ஊடகங்களோ எழுப்பும் போதெல்லாம், "அது நியாயமான கோரிக்கை; அதை நாம் தீர்ப்போம்" என்றும் கூறி வந்தனர். ஆனால், அவர்கள் பதவியில் இருந்த ஒன்பது ஆண்டுகளிலும் அது தீரவில்லை.

இதை அப்போதைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் விமர்சித்தது. ஆயினும், 2015ஆம் ஆண்டு முதல், அக்கட்சி பதவியில் இருந்த ஐந்து ஆண்டுகளிலும் அப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. எனவே, மாறி மாறிப் பதவிக்கு வரும் அரசாங்கங்கள், தம்மை ஏமாற்றுகின்றன என்ற முடிவுக்கு அதிபர், ஆசிரியர் சங்கங்கள் வந்தமை, ஆச்சரியத்துக்குரிய விடயம் அல்ல!

2020ஆம் ஆண்டு, நாட்டில் கொவிட்-19 பெருந்தொற்று நோய் பரவியதை அடுத்து, ஆசிரியர்கள் இணையவழிக் கல்வியை ஆரம்பித்தனர். உண்மையிலேயே, இது கல்வி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட திட்டமொன்றல்ல; கல்வி அமைச்சு அதற்கு இணக்கம் தெரிவித்தது. ஆனால், பல பகுதிகளில் அதற்காக இணைய வழித் தொடர்பு இருக்கவில்லை. சில பகுதிகளில், மாணவர்கள் மரங்களிலும் மலைகளிலும் ஏறியே இணையவழிக் கல்வியைத் தொடர்ந்தனர்.

சில வறிய பிரதேசங்களில், இணையவழித் தொடர்பைப் பெற்றுக் கொள்வதற்காகப் பண வசதி பலருக்கு இருக்கவில்லை. இந்த நிலையில், நாட்டில் சுமார் 40 சதவீத மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஆசிரியர்கள் இந்த விடயங்களின் போது, தம்மால் இயன்ற உதவிகளை மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டே இந்தக் கல்வியைத் தொடர்ந்தனர்.

இந்தப் பின்னணியில் தான், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைகழக சட்ட மூலத்தை அரசாங்கம் முன்வைத்தது. அதன் மூலம், இராணுவப் பின்னணியைக் கொண்ட பல்கலைகழகங்கள் தொகுதியொன்றை ஆரம்பிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகியது.

கல்வியைத் தனியார் மயப்படுத்துவதை விரும்புவோரும் இராணுவப் பின்னணியைக் கொண்ட பல்கலைகழகங்கள் உருவாவதை விரும்பவில்லை. எனவே, பல்கலைகழக மாணவர்கள், கல்வித் துறையின் தொழிற்சங்கங்கள், சில அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து, ஜூலை எட்டாம் திகதி பாராளுமன்றச் சந்தியில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்களின் தலைவர்களையும் சில சிறிய அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் பொலிஸார் கைது செய்து, நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தினர். நீதிமன்றம் அவர்களுக்கு பிணை வழங்கிய போதிலும், பொலிஸார் மீண்டும் அவர்களைப் பிடித்து, பலாத்காரமாக கொவிட்-19 நோய் காரணமாகத் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பினர்.

இந்த அடாவடித்தனத்துக்கு எதிராக, ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் வேறுபாடுகளை மறந்து கிளர்ந்தெழுந்தனர். நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் பரவின. அத்தோடு போராட்டத்தின் பிரதான சுலோகம் கொத்தலாவல பல்கலைகழக பிரச்சினையிலிருந்து ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான கோரிக்கைக்கு மாறியது.

அத்தோடு, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல போன்றவர்கள், ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, இழிவானவர்கள் போன்ற வார்த்தைகளைப் பாவித்தமையால், நிலைமை மேலும் மோசமாகியது. ஆர்ப்பாட்டங்கள் நாளாந்தம் நடைபெற்றன.

ஆசிரியர்களின கோரிக்கைகளை நியாயமானவை என ஏற்றுக் கொண்ட அரசாங்கம், கொவிட்-19 நோய் பரவியிருக்கும் இந்தக் காலத்தில், ஆர்ப்பாட்டங்கள் கொரோனா வைரஸை மேலும் பரப்பும் என்றும் நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கும் நிலையில், அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றப் பணம் இல்லை என்றும் வாதாடினர்.

பணம் இல்லை என்று கூறும் அரசாங்கம், சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களுக்கும் புதிதாக வாகனங்களை இறக்குமதி செய்ய முயன்றமை நாடே அறிந்த விடயமாகும்.

கடந்த வாரம், கொரோனா வைரஸ் மிக வேகமாகப் பரவிக் கொண்டு இருந்தமை உண்மைத் தான். எனினும், அரசாங்கத்தின் செயற்பாடுகளே அந்த வாதங்களுக்கு முரணாக இருந்தன. அரசாங்கம், கடந்த ஜூலை நான்காம் திகதி பெருமளவில் பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. மீண்டும் ஓகஸ்ட் இரண்டாம் திகதி முதல், சகல அரச ஊழியர்களும் தத்தமது அலுவலகங்களிலேயே கடமையாற்ற வேண்டும் எனக் கட்டளையிட்டது. எனவே, அரசாங்கம் கொரோனாவைக் காட்டி, ஆர்ப்பாட்டங்களை நிறுத்த முயல்வது தெளிவாக இருந்தது. இறுதியில் நாட்டில் கொவிட்-19 நோய் பரவும் வேகத்தைக் கருத்தில் கொண்டு, ஆசிரியர்களே சனிக்கிழமை (07) தமது ஆர்ப்பாட்டங்களை இடைநிறுத்தினர்.

போர் நடைபெற்ற காலத்திலும், அப்போதைய அரசாங்கங்கள் போரையும் நிதி நிலைமையையும் காரணம் காட்டி, இந்தக் காலத்தில் போராடுவதா என்று கேட்டன. பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தீர்ப்பதே, பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியாகும். அதனை விடுத்து, குறுக்கு வழியில் பிரச்சினைகளை தீர்க்க முடியாது.



## வாழ்வியல் தரிசனம்

வாய்மையின்மை பலருக்கு விளையாட்டு. பொய்யர்களாக வாழ்வது பற்றிய கவலையே இல்லாமல் இருக்கின்றார்கள். இதன் பிரதிபலன் எதுவும் புரியாமல் வாழ்பவர்களுக்கு எதுவுமே புலப்படாது. ஒருவர் துன்பப்பட்டால் அல்லது இறந்தால், அதற்காக இரக்கப்படாதவர்கள் இருக்கின்றார்கள். ஏனெனில் தாங்கள் இறந்தவர் இல்லை. துன்பப்படுபவரும் தாங்கள் இல்லை என எண்ணித் திருப்தி அடைந்தபடி பேசாமல் போய்விடுகின்றார்கள்.


தனி ஒரு மனிதனின் சக்தி வீண்விரயமாகிப்போனால், அது ஏதோ வகையில் முழு உலகையும் பாதிக்கும். ஏனெனில், தனிமனிதன் ஒவ்வொருவரும் ஒன்றாகியதே மக்கள் ஆகும். எனவே, எனக்கு என்ன, யார், எவர் எப்படியானாலும் எமக்கு என்ன என எண்ணும் சுபாவம், பாவங்களைக் கூட்ட ஏதுவாகிவிடும்.

உண்மை ஒரு பொருள் அல்ல. ஆனால், மனித ஆன்மாவை இயக்கும் புனிதமான சக்தி. உலகை இயக்க அனைத்து உயிர்களும் ஒன்றாக இயங்கியே தீரவேண்டும்.

வளர்ச்சி என்பது தேகவளர்ச்சி மட்டுமல்ல; நெஞ்சம் வியாபித்து உயர்வதுமாகும். உலகை இரசியுங்கள், யாவருக்கும் தோள் கொடுங்கள்.

பருத்தியூர் பால- வைரவநாதன்

## கடிதங்கள்



### பேராறு ஆற்றுக்கு தடுப்பு சுவரின் அவசியம்

திருகோணமலை, கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட கோவில் கிராமம் பகுதியின் ஊடாகச் செல்லும் பேராறு ஆறானது, 1986ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த ஆறு புனரமைக்கப்படாததால் மண் திட்டுகள் ஆற்றின் இரு மருங்கும் இடிந்தும் சரிந்தும் விழுந்து, ஆறில் நீர் ஓட்டங்கள் இன்றியும் குப்பைகள் நிறைந்தும் பற்றைக் காடுகளாக புற்கள் வளர்ந்தும் தற்போது காணப்படுவதால், பாரிய அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர், ஆற்றைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

இந்தப் பேராறு ஆறு, கந்தளாய் பிரதேசத்திலிருந்து ஆரம்பித்து தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கப்பல்துறை ஊடாக கொட்டியாரக் குடா கடலுடன் கலக்கின்றது. திருகோணமலை மாவட்ட விவசாயிகள் பேராறு ஆற்றைப் பெரிதும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

பேராறு ஆற்றில் ஓரமாகச் சென்ற பாதை கூட, இடிந்து போயுள்ளதாகவும் தடுப்புச் சுவர் ஒன்றை அமைத்துத் தருமாறும், இதுகுறித்து ஏற்கெனவே உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும், எந்தவிதமான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

1986ஆம் ஆண்டு கந்தளாய் குளம் உடைப்பெடுத்து, 67 பேர் உயிரிழந்தமையும் இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

-எப். முபாரக்

சென்னை

# தமிழக பட்ஜெட் 13ஆம் திகதி



தமிழக பட்ஜெட் கூட்டத்தொடர், நாளைமறுதினம் 13 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டு, செப்டம்பர் 21ஆம் திகதி வரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசாங்கத்தின் முதல் பட்ஜெடான இதனை நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்கிறார். மறுநாள் ஒகஸ்ட் 14ஆம் திகதி வேளாண்மைத் துறைக்கென முதன் முதலாக தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

முன்னதாக, தமிழக அரசாங்கத்தின் நிதிநிலை குறித்து, நிதியமைச்சர் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்தார். அதில், தமிழகத்தின் வருவாய் பற்றாக்குறை ரூ.61,320 கோடி எனவும், கடந்த 10 ஆண்டுகளில் மாநில வரி வருவாய் வளர்ச்சி 4.4% ஆகச் சரிந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும், ஜிஎஸ்டி வரி பாக்கி ரூ.20,033 கோடியை மத்திய அரசாங்கம் தர வேண்டியுள்ளது எனத் தெரிவித்த அமைச்சர், கடந்த அதிமுக அரசாங்கம் தவறான நிதி மேலாண்மையால் இத்தகைய சரிவு ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டினார். மேலும், இத்தகைய பொருளாதார சூழ்நிலையில், தி.மு.க அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் எனத் தெரிவித்தார். இதனால், தமிழக பட்ஜெட் மீது மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.



நாகர்கோவில்

## அவதூறு பேசிய விவகாரம்: 7 பேரைப் பிடிக்க 2 தனிப்படை

பிரதமர் மற்றும் தமிழக முதலமைச்சர் உள்ளிட்டோரை அவதூறாகப் பேசிய பாதிரியார் ஜோர்ஜ் பொன்னையாவுடன் கைது செய்யப்பட்ட கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் ஸ்டீபன் மீது பெண் அளித்த புகாரின் பேரில், பாலியல் வன்கொடுமை உட்பட மேலும் 6 பிரிவுகளில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இவ்வழக்கில் திராவிட முன்னேற்ற கழக ஒன்றிய செலாளர் உட்பட 7 பேரை பிடிக்க 2 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் ஜூலை 18 ஆம் திகதி கிறிஸ்தவ இயக்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பேசிய பாதிரியார் ஜோர்ஜ் பொன்னையா, இந்து மதம் குறித்தும், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, முதமைச்சர் ஸ்டாலின், அமைச்சர்கள், எம்எல்ஏ பற்றி அவதூறாகவும், சர்ச்சைக்குரிய விதமாகவும் பேசியது வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரவியது.

பாதிரியார் ஜார்ஜ் பொன்னையா, நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த அருமனை கிறிஸ்தவ இயக்கச்செயலாளர் ஸ்டீபன் ஆகியோர்மீது 7 பிரிவுகளில் அருமனை வழக்குப் பதிவு செய்து, இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், ஸ்டீபன் உட்பட 8 பேர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக, திருவட்டாறு அருகே உள்ள வியன்னூர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுபெண் மார்த்தாண்டம் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

மங்களூரு

## பூனைக்காக உயிரை பயணம் வைத்தார்



கிணற்றில் தவறி விழுந்த பூனைக் குட்டியை, உயிரைப் பணயம் வைத்து மீட்ட, விலங்குகள் நல ஆர்வலரின் செயலை பலரும் பாராட்டினர்.

தட்சிண கன்னடா மங்களூரை சேர்ந்தவர் ரஜினிஷெட்டி. இவரது கணவர் தாமோதரஷெட்டி. இருவரும் விலங்குகள் நல ஆர்வலர்கள். நாள்தோறும் 50 கிலோ உணவு தயாரித்து, 100க்கும் அதிகமான நாய்கள், பூனைகள், பறவைகளுக்கு பல ஆண்டுகளாக உணவளித்து வருகின்றனர்.

இவைகளுக்கு காயம் ஏற்பட்டால் உடனடியாக கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று காப்பாற்றி வருகின்றனர். இந்நிலையில், மங்களூரு ஜெப்பினமொகர் கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள் அதுல், சந்தீப் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது கிணற்றில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த பூனையை பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

விலங்குகள் நல ஆர்வலர் ரஜினிஷெட்டிக்கு உடனடியாக தகவல் அனுப்பினர். தனது கணவருடன் அங்கு வந்த அவர், சற்றும் யோசிக்காமல், இடுப்பில் கயிற்றை கட்டி, கிணற்றில் இறங்கி பூனையை காப்பாற்றினார். இவரின் செயலை கிராமத்தினர் பாராட்டினர்.

சிவகங்கை

## தி.மு.கவினர் இடையே மோதல்



சிவகங்கை குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் ஒப்பந்தம் எடுப்பதில் திராவிட முன்னேற்ற கழகத்தினரிடையே மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவருக்கு மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டது.

சிவகங்கை தொண்டி சாலையில் குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு மற்றும் நிர்வாகப் பொறியாளர் அலுவலகங்கள் ஒரே கட்டடத்தில் உள்ளன. நேற்று நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் 27 குடிநீர் பராமரிப்புப் பணிகள், கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில் 6 குடிநீர் பராமரிப்புப் பணிகள் என 33 பணிகள் ரூ.3,1/2 கோடிக்கு ஒப்பந்தம் விடப்பட்டன.

இதில் தி.மு.க மாவட்ட துணைச் செயலாளர் சேங்கைமாறன் தரப்பினருக்கும் சிவகங்கை ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் சோமன் தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பிறகு மோதலாக மாறி, இரு தரப்பினரும் தாக்கிக் கொண்டனர். இதில் சோமனின் மண்டை உடைந்ததால் ஆத்திரமடைந்த அவரது ஆதரவாளர்கள் எதிர் தரப்பினரின் காரை சேதப்படுத்தினர். பொலிஸார் இரு தரப்பினரையும் சமரசப் படுத்தினர். காயமடைந்த சோமன் சிவகங்கை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கோவை

### வேளாண் துறைக்கு தனி நிதிநிலை

## தமிழகத்துக்கு பாராட்டுகள்




தமிழ்நாட்டில் வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்ற தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவிப்புக்கு ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு பாராட்டு தெரிவித்துள்ளார்.

வேளாண் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் ஒகஸ்ட் 14 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட உள்ளது. அதில், இயற்கை வேளாண்மைக்கு தனிக் கவனம், உழவர் சந்தைகளுக்கு புத்துயிர் அளித்தல், கிராம சந்தைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற முக்கிய அம்சங்கள் இடம்பெறும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இவை அனைத்தும் வரவேற்கத்தக்க அம்சங்கள் ஆகும். தமிழ்நாட்டில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக ஈஷா பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், 'வரலாற்று சிறப்புமிக்க வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்யவிருக்கும் தமிழக அரசாங்கத்துக்கு பாராட்டுகள். மிக தொன்மையான வேளாண் பாரம்பரியம் கொண்ட, இயற்கை விவசாயத்தில் முன்னோடியான தமிழகம், இதன்மூலம் மகத்தான பொருளாதார, சுற்றுச்சூழல், ஆரோக்கிய பலன்களை நிச்சயம் பெறும். வாழ்த்துகள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை

## பட்டிமன்ற பேச்சாளர் மருத்துவமனையில் அனுமதி



உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர், அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

பிரபல பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர், தனியார் வங்கியில் துணைத் தலைவராகவுள்ளார். வங்கிப் பணிகளுக்கு இடையே, சொலமன் பாப்பையாவின் பட்டிமன்ற குழுவில் இணைந்து, தொடர்ந்து பேசி வருகிறார்.

இந்நிலையில், திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், சென்னையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில், மூளைக்கு செல்லும் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு, பாரதி பாஸ்கர், டொக்டர்களின் தொடர் கண்காணிப்பில் உள்ளார்.

ஸ்ரீநகர்

## துர்கா கோவிலில் வழிபடும் ராகுல்



காங்கிரஸ் எம்.பி ராகுல் இரண்டு நாள் பயணமாக ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு சென்றார். அங்கு அவர், கந்தர்பல் மாவட்டத்தின் துல்முல்லாவில் உள்ள கீர்பவானி துர்கா கோவிலில் வழிபாடு நடத்தினார். அவருடன் கட்சி நிர்வாகிகள் சிலர் வந்திருந்தனர்.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட பிறகு ராகுல் முதல்முறையாக இரண்டு நாள் பயணமாகச் சென்றுள்ளார். அங்கு காங்கிரஸ் தலைவர் குலாம் அஹமதின் மகனின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், கட்சியின் தலைமை அலுவலகத்தை திறந்து வைத்து, தொண்டர்களுடன் கலந்துரையாடவும் திட்டமிட்டு உள்ளார்.

கோவை

## தி.மு.கவைக் கண்டித்து கோஷம்



அண்ணா திராவிட முன்னேற்ற கழக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வீட்டின் முன்பு திரண்ட அ.தி.மு.கவினர், தி.மு.கவைக் கண்டித்து கோஷம் எழுப்பி வருகின்றனர்.


அ.தி.மு.க ஆட்சியில் அமைச்சராக எஸ்.பி.வேலுமணி பதவி வகித்தபோது, அவர் மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வந்தன. வேலுமணிக்கு நெருக்கமான ஒப்பந்த நிறுவனங்களுக்கு மட்டும் அதிக அளவில் ஒப்பந்த திட்டப் பணிகள் கொடுக்கப்படுவதாகவும், மற்ற ஒப்பந்த நிறுவனங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் புகார்கள் எழுந்தன.

இதற்கிடையே, அ.தி.மு.கவில் இருந்து விலகி சமீபத்தில் தி.மு.கவுக்கு வந்த ரேஸ்கோர்ஸ் ரகுநாத், அ.தி.மு.க ஆட்சியில் எஸ்.பி.வேலுமணி ஊழல்களில் ஈடுபட்டதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமீபத்தில் புகார் அளித்தார். தவிர, அ.தி.மு.க ஆட்சியில் ஒப்பந்தப் பணி பெற்றுத் தருவதாகக் கூறி ரூ.120 கோடி மோசடி செய்துவிட்டதாக, கோவையைச் சேர்ந்த திருவேங்கடம் என்பவர், எஸ்.பி.வேலுமணி உள்ளிட்ட 3 பேர் மீது சென்னை மாநகர பொலிஸில் நேற்றுமுன்தினம் (09) புகார் அளித்து இருந்தார். இந்நிலையில், கோவையிலுள்ள எஸ்.பி.வேலுமணியின் வீடு, அவரது சகோதரர் வீடு உள்ளிட்ட கோவையில் 35 இடங்களில் இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் நேற்றுக்காலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

## நாட்டின் கொவிட்-19 நிலைமை

| | | |
|---|---|---|
| மொத்த தொற்றாளர்கள் | - | 332,947 |
| வைத்தியசாலைகளிலுள்ள தொற்றாளர்கள் | - | 32,318 |
| புதிய தொற்றாளர்கள் | - | 2,993 |
| மொத்த குணமடைந்தவர்களின் எண்ணிக்கை | - | 295,918 |
| மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை | - | 5,222 |

(தகவல்: அரசாங்கத் தகவல் திணைக்களம்)



## கொரோனா துளிகள்...

01) கொரோனா தடுப்பூசி தொடர்பில் காணப்படும் பிரச்சினை மற்றும் தடுப்பூசிக்குப் பதிவு செய்வதற்காக 1906 என்ற விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம். வயதானவர்கள் அல்லது பாரதூரமான நோயால் பாதிக்கப்பட்டு தடுப்பூசி பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், தமது பெயர் மற்றும் முகவரியை குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு பதிவுசெய்துகொள்ள முடியும்.

02) தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்கள் உயிரிழக்கும் சதவீதம் குறைவு என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுள் சுமார் 200 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர்களில் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொண்ட 23 பேரே உயிரிழந்துள்ளனர்.

03) எதிர்வரும் இரண்டு வாரங்களில் என்ன செய்தாலும், கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

04) பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1906 என்ற இலக்கத்தை அழைத்து எந்தவொரு வைத்தியசாலையிலும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம் என மகளிர் மற்றும் மகப்பேறு வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

05) மேல் மாகாணத்தில் இதுவரை 60 வயதுக்கு மேற்பட்ட பலர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவில்லை. பிரதேச செயலாளர்கள் ஊடாக, கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்கள் தொடர்பிலான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

06) அஸ்ட்ராசெனகா தடுப்பூசியின் 2ஆவது டோஸை வழங்குவதற்காக 45 தடுப்பூசி நிலையங்களும் ஏனைய தடுப்பூசிகளை வழங்குவதற்காக மேலும் 293 தடுப்பூசி நிலையங்களும் நேற்று (10) அமைக்கப்பட்டிருந்தன.

### மலையகம்

07) ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று (10) தொற்றாளர்கள் 26 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் அதிகமானோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். (ரஞ்சித் ராஜபக்ஷ)

08) அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா, வலப்பனை, ஹங்குராங்கத்த ஆகிய 5 பிரதேச செயலகப் பகுதிகளில் உள்ள 13 பொதுச் சுகாதார பிரிவுகளில் 5,433 குடும்பங்களைச் சேர்ந்த 9,029 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஆ. ரமேஸ்)

09) தலவாக்கலை, குணானந்தபுர பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய நபரும் அவரது 71 வயதுடைய மனைவியும் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். (பி.கேதீஸ்)

### கிழக்கு மாகாணம்

10) கிழக்கு மாகாணத்தில் ஜூலை மாதத்தில் 5,205 கொவிட்-19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 99 மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் 3,200 தொற்றாளர்களும் 40 மரணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மூன்றாவது கொவிட்-19 அலையில் மொத்தமாக 20,009 தொற்றாளர்களும் 393 மரணங்களும் ஏற்பட்டுள்ளன. (எம்.எஸ்.எம். ஹனீபா)

11) இலங்கையில் கொவிட்- 19 வந்தகாலம் தொடக்கம் இதுவரை, ஒரேநாளில் 277 அதியுயர் தொற்றுகளின் எண்ணிக்கையை அம்பாறை மாவட்டம் நேற்று முன்தினம் (09) பதிவுசெய்திருக்கின்றது. (வி.ரி. சகாதேவராஜா)

12) காத்தான்குடியில் நேற்றிலிருந்து (10) மறு அறிவித்தல் வரை வலீமா போன்ற விருந்துபசாரங்கள் நடத்துவதற்கு தடை. 25 பேருடன் திருமண நிகழ்வு மாத்திரம் வீட்டில் நடத்த அனுமதி. (எம்.எஸ்.எம். நூர்தீன்)

13) அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட இசங்கணிச்சீமை, சம்பு நகர், ஆலம்குளம், ஆலிம் நகர் போன்ற கிராமங்களில், வாய்க்கால் கரையோரங்கள், வயல்வெளிகளில் குடும்ப சகிதம் நடந்து திரிந்தவர்களுக்கு அதிரடியாக அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (எம்.எல்.எஸ்.டீன்)

14) கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எல்லைக்குட்பட்ட 13 பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இதுவரை 96 கொவிட்-19 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. (எம்.ஏ.றமீஸ்)

### வடக்கு மாகாணம்

15) பண்ணைக் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த இளைஞனுக்கு, கொரோனா உறுதியானது. சடலம் கோம்பயன் மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்டது. (எம். றொசாந்த்)

16) வவுனியா வடக்கு, தெற்கு, செட்டிகுளம் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், வவுனியா வைத்தியசாலையில் கடமை புரியும் இரண்டு வைத்தியர்கள், இராணுவ வீரர் உட்பட 76 பேருக்கு கொரோனா தொற்று உறுதி. (க.அகரன்)


17) யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் (09) வரையான 24 மணி நேரத்தில், 5 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 153ஆக அதிகரித்துள்ளது. (எம்.றொசாந்த்)

LK Newspapers Viber Community

ஐ. அமெரிக்கா

டெல்டாவுக்கு எதிராக

# பைஸரை விட மொடெர்னா சிறந்தது





கொரோனா வைரஸின் டெல்டா மாறிக்கு எதிராக மொடெர்னாவின் தடுப்புமருந்தை விட பைஸரின் தடுப்புமருந்து குறைவாக செயற்படலாம் என கடந்த வாரயிறுதியில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

மயோ சிகிச்சை சுகாதார அமைப்பில் 50,000க்கும் மேற்பட்ட நோயாளர் பரிசோதிக்கப்பட்டிருந்தனர்.

இதில், இவ்வாண்டு ஆரம்பத்தில் 86 சதவீதமாக இருந்த மொடெர்னாவின் செயற்பாட்டு வீதமானது கடந்த மாதம் டெல்டா மாறி ஆதிக்கம் செலுத்துகையில் 76 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதே காலப் பகுதியில் பைஸரின் செயற்பாட்டு வீதமானது 76 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

எவ்வாறெனினும், கொரோனாவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதை தடுப்பதில் இரண்டு தடுப்புமருந்துகளும் சிறப்பாக உள்ளன.



மாலி

# போராளிகளின் தாக்குதலில் 51 பேர் பலி

வட மாலியிலுள்ள சில கிராமங்களை துப்பாக்கிதாரிகள் தாக்கியதாகவும், நகர்ந்த எதையும் சுட்டதாகவும், குறைந்தது 51 பேரைக் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சில போராளித் தலைவர்களின் அண்மைய கைதுக்குப் பதிலடி போன்றே இது தோன்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலி, நைகர், பேர்க்கினா பாஸோவுள்ள எல்லைப் பகுதியிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இப்பிரதேசத்திலேயே ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக்குழு, அல்-கொய்தாவுடன் தொடர்புடைய போராளிகள் செயற்பாட்டில் இருக்கின்றனர்.

இந்நிலையில், வீடுகள் சூறையாடப்பட்டதுடன், தரை மட்டத்துக்கு எரிக்கப்பட்டதாகவும், கால்நடைகள் கொண்டு செல்லப்பட்டதாக, கவோ பிராந்தியத்துக்கான ஆளுநருக்கு அஸொங்கோ மாவட்ட அதிகாரி எழுதிய குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தாக்குதல்களுக்கு எக்குழுவும் இதுவரையில் உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# திறந்த நிலையில் கோபுரப் பாலம்

பிரித்தானியத் தலைநகர் இலண்டனிலுள்ள கோபுரப் பாலமானது, தொழில்நுட்பக் கோளாறு ஒன்றால் திறந்த நிலையில் சிக்கியவாறு காணப்படுகின்றது.

சீனா

நீண்டதூர மலை ஏற்றத்துக்குப் பின்னர்

# பாதுகாப்பான புகலிடத்துக்கு திரும்பும் யானைகள்



தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்திலுள்ள தங்களது பாதுகாக்கப்படும் புகலிடத்தை நோக்கி தெற்காக 14 காட்டு யானைகள் செல்வதாக குறித்த மாகாண அதிகாரிகள் நேற்று முன்தினமிரவு தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் கவனத்தை ஈர்த்த 1,300 கிலோமீற்றர் மலையேற்றத்துக்குப் பின்னரே யானைகள் இவ்வாறு திரும்புகின்றன.

காட்டு யானைகளைக் கையாள அமைக்கப்பட்டிருந்த அவசரநிலை செயற்குழுவானது மின்வேலிகள், இரை, செயற்கை வீதிகளைப் பயன்படுத்தி யானைகள் சரியான பாதையில் செல்வதை உறுதிப்படுத்தியிருந்தன.

> **மின்வேலிகள், இரை, செயற்கை வீதிகளைப் பயன்படுத்தி யானைகள் சரியான பாதையில் செல்வது உறுதிப்படுத்தப்பட்டது. உணவளிக்க, பொதுமக்களின் பாதுகாப்புக்கு 25,000 பொலிஸார், 1,500 அவசரநிலை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன**

யானைகளைப் பின்தொடர, உணவளிக்க, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த 25,000 பொலிஸார் மற்றும் பணியாளர், 1,500 அவசரநிலை வாகனங்களை யுனான் தரையிறக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

யானைகள் செல்லும் பாதையில் இருந்த 150,000க்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டிருந்ததுடன், சொத்துச் சேதக் காப்பீட்டு நிதிகளுக்காக ஐந்து மில்லியன் யுவான்கள் வழங்கப்பட்டிருந்தன.

கினி

# முதலாவது தொற்று வீதம் அதிகமான மார்பேர்க் வைரஸ்



மார்பேர்க் நோயுடைய முதலாவது நபரை மேற்கு ஆபிரிக்க தேசமான கினி பதிவு செய்துள்ளது.

எபோலா போன்ற வைரஸான மார்பேக்கால் தொற்று வீதம் அதிகமான காய்ச்சல் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

கினியிலுள்ள சுகாதார அதிகாரிகள் குறித்த தொற்றை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியதாக, உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. குறித்த தொற்றுக்குள்ளானோரின் நிலையானது வேகமாக மோசமாகியுள்ளது.

வௌவால்களிடமிருந்து மனிதர்களுக்கு கடத்தப்படக்கூடிய குறித்த வைரஸானது, தொற்றுக்குள்ளானோருடன் நேரடியாகத் தொடர்பில் உள்ளோருக்கு பரவக் கூடியது.

கடும் காய்ச்சல், மோசமான தலையிடி, சோர்வுடன் இந்த நோயானது ஆரம்பிக்கும். இதன் உயிரிழப்பு வீதமானது 24-இலிருந்து 88 வரையில் காணப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை 4-1 என

# பங்களாதேஷ் கைப்பற்றியது




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு T20 சர்வதேசப் போட்டித் தொடரை 4-1 என பங்களாதேஷ் கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 4-1 என தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 122/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் நைம் 23 (23), மகமதுல்லா 19 (14), சௌமியா சர்க்கார் 16 (18), மஹெடி ஹஸன் 13 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: நாதன் எலிஸ் 2/16 (4), டான் கிறிஸ்டியன் 2/17 (4), அடம் ஸாம்பா 1/24 (4), அஸ்தன் அகர் 1/28 (4), அஸ்தன் தேணர் 1/16 (2))

அவுஸ்திரேலியா: 62/10 (13.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: மத்தியூ வேட் 22 (22), பென் மக்டர்மூட் 17 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 4/9 (3.4), மொஹமட் சைஃபுடீன் 3/12 (3), நசும் அஹ்மட் 2/8 (2), மகமதுல்லா 1/9 (1), முஸ்தபிசூர் ரஹ்மான் 0/3 (1))

போட்டியின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

தொடரின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின்

# விளையாட்டுத் தினம்



ஷ். முபாரக்




கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் விளையாட்டுத் தினம் கொண்டாடப்பட்டது. கடந்த மாதம் 31ஆம் திகதி கொண்டாடப்பட்ட இலங்கைத் திருநாட்டின் விளையாட்டுத் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் முன்னால் விளையாட்டு உடற்பயிற்சிகள் இடம்பெற்றன.

தேசிய கொடி ஏற்றப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. விளையாட்டுத் தினம் தொடர்பிலும் போசனை கூறுகளின் அவசியம் குறித்தும் உடற்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பிலும் கருத்துரைகள் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியாக அலுவலர் உடற்பயிற்சிகளில் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டார்கள்.

இலங்கைக்கு முதலாவது ஒலிம்பிக் பதக்கம் கிடைத்த வரலாற்று சிறப்புமிக்க நாள் ஜுலை 31ஆம் திகதி ஆகும்.

1948 ஆம் ஆண்டு, (31-07-1948) ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்து கொண்டு, மேஜர் தேசமான்ய டங்கன் வைட் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

ஆப்கானிஸ்தானின்

# பந்துவீச்சுப் பயிற்சியாளராக டைட்




ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக, அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் ஷோன் டைட் நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஐந்து மாதங்களுக்கே டைட் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் தனது குடும்பத்துடன் தற்போது வசித்து வரும் டைட், ஆப்கானிஸ்தானுக்கு நகர மாட்டார் என்றபோதும் அணி எங்கும் பயணமாகும்போது பயணிக்கவுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் இரண்டாம் தர சான்றிதழ் உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சியாளர் டைட் என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய பிக் பாஷ் லீக்கின் மெல்பேண் றெனிகேட்ஸ், அபு தாபி டி10 லீக்கின் பங்களா டைகர்ஸின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முன்னர் டைட் பணியாற்றியுள்ளார்.

மருதூர் பிறீமியர் லீக்:

# சாய்ந்தமருது லெவிண் ஹீரோஸ் வெற்றி

அஸ்ஹர் இப்றாஹீம்





மருதூர் பிறீமியர் லீக்கில், அண்மையில் நடைபெற்ற அட்டாளைச்சேனை பிரண்ட்ஸுடனான போட்டியில் சாய்ந்தமருந்து லெவிண் ஹீரோஸ் வென்றது.

சாய்ந்தமருது கிரிக்கெட் சம்மேளனத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 15 ஓவர்கள் கொண்ட கடின பந்து கிரிக்கெட் தொடரின் ஆரம்ப நாள் போட்டியிலேயே 9 விக்கெட்டுகளால் ஹீரோஸ் வென்றிருந்தது.

சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில், சாய்ந்தமருந்து கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைவர் எம்.எச்.கே. காலித்தீன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ், 11.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, துடுப்பெடுத்தாடிய ஹீரோஸ், 6.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்தது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 32 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் இத்தொடரின் பங்கேற்கின்றன. இப்போட்டியின் நாயகனாக ஹீரோஸின் முஹமட் சல்பி தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 11 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.